மதுரை மக்களின் நீண்ட கால எதிர்பார்ப்பு நிறைவேறுகிறது:

# வீர மங்கை வேலுநாச்சியார் பெயரில் மேம்பாலம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழாரம்!

சென்னை, டிச.7-

வீரமங்கை வேலுநாச்சியார் மேம்பாலம் திறப்பு குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-

**வீரமங்கை வேலுநாச்சியார் மேம்பாலம்: மதுரை மக்களின் நீண்டகால எதிர்பார்ப்பு நிறைவேறுகிறது!**

**மதுரை சிவகங்கை மாவட்டங்களை இணைக்கும் மேலமடை சந்திப்பு சாலை மேம்பாலத்தைப் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக, நாளை (இன்று) நான் திறந்து வைக்கிறேன்.**

**இந்த முக்கிய மேம்பாலத்துக்கு, இம்மண்ணின் மக்களை ஒன்றுதிரட்டி ஆங்கிலேயர்களுக்கு எதிராகப் போராடிய வீர மங்கை வேலுநாச்சியார் அவர்களின் பெயரைச் சூட்டிப் பெருமையடைகிறோம்!**

**சீற்றமிகு சிவகங்கை அரசியின் புகழை இந்த மேம்பாலம் ஒவ்வொரு நாளும் நினைவூட்டிக் கொண்டே இருக்கும்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில், துறைமுகம் மேற்கு பகுதியில், மனிதநேய உதயநாளை முன்னிட்டு "உதயம் 20, யாதும் ஊரே தமிழ் தத்துவம்! எங்கள் உதயம் கழக புத்தகம்!! எனும் தலைப்பில், ராஜா அண்ணாமலை மன்றத்தில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் பா.ஜெகதீஷ் தலைமையில் நடைபெற்ற மாபெரும் நலத்திட்டம் வழங்கும் விழாவில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் ஆகியோர் 800 வட இந்தியர்களுக்கு நல திட்ட உதவிகள் வழங்கி சிறப்புரையாற்றினர். மேலும் இந்நிகழ்ச்சிக்கு வந்த அனைவருக்கும் உணவு பரிமாறப்பட்டது.

திருவண்ணாமலையில் தி.மு.க. இளைஞர் அணி வடக்கு மண்டல நிர்வாகிகள் சந்திப்பு கூட்டத்தில்

# காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட இளைஞர் அணியினர் 5000 பேர் எழுச்சியுடன் பங்கேற்போம்!

## மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்! மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

காஞ்சிபுரம், டிச.7

திருவண்ணாமலையில் வருகிற 14 ஆம் தேதி அன்று தி.மு.க. இளைஞர் அணி வடக்கு மண்டல நிர்வாகிகள் சந்திப்பு கூட்டம், கழக இளைஞர் அணிச் செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில், கழகத் தலைவர் முதல்வர் மு.கஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற்றும் இக் கூட்டத்தில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழக இளைஞர் அணியினர் 5000க்கும் மேற்பட்டோர் எழுச்சியுடன் கலந்து கொள்வது என்று மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார்.



காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட க் கழகச் செயற்குழுக் கூட்டம் காஞ்சிபுரம் கலைஞர் பவள விழா மாளிகையில் மாவட்டக் கழக அவைத் தலைவர் ச. இனியரசு தலைமையில் நடைபெற்றது தொடக்கத்தில் மாவட்ட கழக செயலாளர் க. சுந்தர் எம்.எல்.ஏ. கூட்டத்தில் கலந்து கொண்டவர்களை அனைவரையும் வரவேற்று பேசினார்.

இதில் மாவட்டக் கழக நிர்வாகிகள் ஒ எஸ் தினகரன். க. செல்வம் எம் பி. திருமதி மலர்விழி குமார். சன் பிராண்டு. ஆறுமுகம், சட்டமன்ற உறுப்பினர் சி .வி. எம். பி. எழிலரசன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் டி ஆர் நாராயணன், எம் எஸ் சுகுமார், மாநில வர்த்தகர் அணி துணைச் செயலாளர் வி.எஸ். இராமகிருஷ்ணன், மாநில இலக்கிய அணி ஆர். தசரதன், செங்கல்பட்டு மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் திருமதி செம்பருத்தி துர்கேஷ், காஞ்சிபுரம் மேயர் திருமதி மகாலட்சுமி யுவராஜ், பொதுக்குழு உறுப்பினர்கள் வெளிக்காடு ஏழுமலை, எஸ்.கே.பி. சீனிவாசன், எஸ் சிகாமணி, எஸ் உசேன், பொன். சசிகுமார், நகரச் செயலாளர் கே குமார், ஒன்றியச் செயலாளர்கள் டிவி கோகுல கண்ணன், கெ. ஞானசேகரன், பி.எம். குமார், பொன்.சிவக்குமார், க. குமணன், டி குமார், பி. சேகர், பி.எம். பாபு, சத்ய சாய் கே கண்ணன். ஜி தம்பு.. ஏழுமலை சிற்றரசு. சரவணன். எம் எஸ் பாபு .கே எஸ் ஆர் கார்த்திகேயன். பகுதி செயலாளர்கள் எஸ் சந்துரு. சு. வெங்கடேசன், கே திலகர், மாநகர நிர்வாகிகள் கே ஏ செங்குட்டுவன், ஏ எஸ் முத்து செல்வம், பேரூர் செயலாளர்கள் என்.எஸ். பாரி வள்ளல், ஆ சுந்தரமூர்த்தி. மோகன் தாஸ். வி. எழிலரசன். மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் அ.யுவராஜ், ஆ.செல்வி வ. மலர்மன்னன்.நாத்திகம் நாகராஜன். எஸ். மாலதி. ராதா கிருஷ்ணன். ஏன் பாரத். ஜி தெய்வ சிகாமணி. கலியுக கண்ணதாசன். ஜெய் கணேஷ் திருமதி கலைச்செல்வி ஜெகநாதன் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள்.டி. சஞ்சய் காந்தி. அருள் முருகன். யுவராஜ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். முடிவில் மாவட்டக் கழகச் செயலாளர் க. சுந்தர் எம் எல் ஏ தீர்மானம் விளக்கிப் பேசினார்.

இக் கூட்டத்தில் நிறைவேற்றப் பட்ட தீர்மானம் வருமாறு.

கழக இளைஞர் அணியினை சீரோடும் சிறப்போடும் வழிநடத்திக் கொண்டிருக்கும் நமது கழக இளைஞர் அணிச் செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தி.மு.க. வரலாற்றினை இக் கால இளைஞர்கள் அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் தி.மு.க. 75, அறிவிபுத் திருவிழாவினை பார் போற்றும் வகையில் வள்ளுவர் கோட்டத்தில் நடத்தி சிறப்பித்தார்.

அதோடு இளைஞர் அணி நிர்வாகிகளை மாவட்டம் முதல் கிளைக் கழக வார்டுக் கழகம் வரை தேர்ந்தெடுத்து அறிவித்து வருகிறார்.

அதன் முத்தாய்ப்பாக வருகிற 14.12.2025ஞாயிற்றுக்கிழமை அன்று திருவண்ணாமலை, கலைஞர் திடலில் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற்றிட, கழக இளைஞர் அணிச் செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெறும் தி.மு.க. இளைஞர் அணி வடக்கு வண்டல நிர்வாகிகள் சந்திப்புக் கூட்டம் நடைபெறுகின்றது.

அதன்படி திருவண்ணாமலையில் வருகிற 14 ஆம் தேதி அன்று தி.மு.க. இளைஞர் அணி வடக்கு மண்டல நிர்வாகிகள் சந்திப்புக் கூட்டத்தில் நமது காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழக இளைஞர் அணியினர் 5000க்கும் மேற்பட்டோர் எழுச்சியுடன் கலந்து கொண்டு சிறப்பிப்போம்.

இவ்வாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.



திருவள்ளூர் மத்திய மாவட்டம் மாநகர ஒன்றிய நகர பேரூர் பகுதி கழக செயலாளர்கள் இளைஞர் அணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இதில் மாவட்ட கழகச் செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் வருகின்ற 14ஆம் தேதி அன்று திருவண்ணாமலையில் திமுக இளைஞர் அணியின் வடக்கு மண்டல நிர்வாகிகள் சந்திப்பு கூட்டத்தில் பங்கேற்பு குறித்து பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார். உடன் மாநில மாவட்ட கழக நிர்வாகிகள் மாநகர ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் மாவட்ட மாநகர ஒன்றிய நகர பகுதி பேரூர் இளைஞர்அணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள்கழக நிர்வாகிகள் உள்ளனர்.



காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் ஒன்றியம், ஐயப்பன்தாங்கல் தனியார் பள்ளியில் நேற்று (06.12.2025) நடைபெற்ற "நலன் காக்கும் ஸ்டாலின் முகாமினை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் பொது சுகாதாரம் மற்றும் மருத்துவ துறை இயக்குநர் மரு.சோமசுந்தரம், மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் படப்பை ஆ.மனோகரன், குன்றத்தூர் ஒன்றியக்குழுத்தலைவர் திருமதி.சரஸ்வதி மனோகரன், இணை இயக்குநர் (மருத்துவப்பணிகள்) மரு.எம்.ஹிலாரினா ஜோசிட்டா நளினி, மாவட்ட சுகாதார அலுவலர் மரு.த.ரா செந்தில் ஆகியோர் உள்ளனர்.

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள்! நெல்லை மத்திய மாவட்டம்—

# மானூரில் இன்று பொதுக்கூட்டம்! ஆர்.எஸ்.பாரதி சிறப்புரை!

## சூர்யா வெற்றிகொண்டான் பங்கேற்பு! மு. அப்துல் வகாப் எம்.எல்.ஏ. தலைமை!

நெல்லை.டிச.7-

நெல்லை மத்திய மாவட்டம் மானூர் கிழக்கு ஒன்றிய தி.மு.க சார்பில் கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 49 ஆவது பிறந்தநாள் முன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டம் மானூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் சூ.அருள்மணி ஏற்பாட்டில் கங்கைகொண்டானில் இன்று (07.12.2025 ) ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணி அளவில் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல்வகாப் தலைமையில் நடைபெறுகிறது.

இந்நிகழ்வில் கழக அமைப்பு செயலாளர் ஆர். எஸ்.பாரதி,கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் சூர்யா வெற்றிகொண்டான் ஆகியோர் பங்கேற்று சிறப்புரையாற்று கின்றனர்.

நெல்லை மத்திய மாவட்டம் மானூர் கிழக்கு ஒன்றிய தி.மு.க சார்பில் கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 49 வது பிறந்த நாளை முன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டம் கங்கைகொண்டானில் இன்று (7ம் தேதி ஞாயிற்றுக்கிழமை) மாலை 6 மணி அளவில் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல்வகாப் தலைமையில் முத்தையா, மாயாண்டி, லயன் மந்திரம் பிள்ளை, பரமசிவம், செல்லப்பா, சுடலைமுத்து, சித்திரைவேல், இசக்கி முத்து,பீர் மணி, அண்ணாதுரை, ராசையா, செல்வி ராமசாமி,மந்திரம், அடைக்கலம்,இசக்கி பாண்டி, இசக்கி பெருமாள், அருணாசலம்,குழந்தை, ராஜபதி கனகராஜ்,சங்கரன்,சங்கரன், கணேசன்,சண்முகவேல்,மாடசாமி குட்டி, கோபால் ஆசாரி,ஆறுமுகம், உத்திரவாசகம்,அப்பு என்ற ஆறுமுகம், கேபிள் வெள்ளத்துரை,பெரியசாமி, இசக்கி, நேதாஜி நகர் இசக்கி,காட்டு ராஜா, ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

மாவட்ட முன்னாள் துணைச் செயலாளர் ஆ.க. மணி, மானூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் அருள்மணி ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர்.

நிகழ்ச்சியை மத்திய மாவட்ட இலக்கிய அணி சின்னத்துரை, கழகப் பேச்சாளர்கள் நெல்லை முத்தையா, நெல்லை ரவி,சி.பா ராவணன், நெல்லை மணி ஆகியோர் தொகுத்து வழங்குகின்றனர்.

இந்நிகழ்வில் கழக அமைப்பு செயலாளர் ஆர். எஸ்.பாரதி,கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் வெற்றிகொண்டான் ஆகியோர் பங்கேற்று சிறப்புரையாற்றுகின்றனர்.

நிகழ்வில் மாநில சிறுபான்மை நல உரிமைபிரிவு தலைவர் முன்னாள் அமைச்சர் டி.பி.எம்.மைதீன்கான்,மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர்கள் என்.மாலைராஜா,ச. முத்துச்செல்வி, தென்காசி மாவட்ட முன்னாள் செயலாளர் ஆ.துரை,தலைமை செயற்குழு உறுப்பினர் ஏ.எல்.எஸ். லெட்சுமணன்,

மாநில மகளிர் தொண்டரணி துணைச் செயலாளர் விஜிலாசத்தியானந்த்,மாநில நெசவாளர் அணி செயலாளர் பெருமாள், மாநகராட்சி மேயர் கோ.ராமகிருஷ்ணன், துணை மேயர் கே.ஆர்.ராஜு, மாவட்ட மருத்துவ அணி ரவி, நெல்லை கிழக்கு மாநகர பொறுப்பாளர் தினேஷ், மேற்கு மாநகரப் பொறுப்பாளர் சு.சுப்பிரமணியன், முன்னாள் துணை மேயர் முத்துராமலிங்கம்,தலைமை செயற்குழு உறுப்பினர் பேச்சிபாண்டியன், மாவட்ட துணை செயலாளர்கள் சுரேஷ், கிரிஜா குமார்,மாநகர துணை செயலாளர் மூளிகுளம் பிரபு,தச்சை பகுதி பொறுப்பாளர் பூ.சுப்பிரமணியன்,

உள்பட மாவட்ட,மாநகர,நிர்வாகிகள்,பகுதி கழக நிர்வாகிகள்,பொதுக்குழு உறுப்பினர்கள்,கிளை கழக செயலாளர்கள்,உள்ளாட்சி பிரதிநிதிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள்,பாக முகவர்கள் (BLA2) பூத் டிஜிட்டல் ஏஜெண்ட் (BDA) கழக நிர்வாகிகள், யகழகத் தொண்டர்கள், பொதுமக்கள் கலந்து கொள்கின்றனர்.

நிகழ்ச்சி நிறைவில் மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி துணை அமைப்பாளர் எஸ்.ஏ. பிரபா அருள்மணி, சமூக வலைத்தளம் களப்பணியாளர் கீர்த்தி ஆகியோர் நன்றியுரையாற்றுகின்றனர்.

கூட்ட ஏற்பாடுகளை மானூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் சூ.அருள்மணி செய்துள்ளார்.





தென்மாவட்ட வளர்ச்சிக்கு மேலும் வித்திடும் வகையில் மதுரை, மேலமடை – அண்ணாநகர் சந்திப்பில் ரூபாய் 150 கோடி செலவில் கட்டப்பட்டு இன்று 07.12.25 அன்று திறக்கப்பட உள்ள, மதுரை தொண்டி சாலை அண்ணா பேருந்து நிலையம் சந்திப்பில் தொடங்கி ஆவின் சந்திப்பு, மேலமடை சந்திப்பு வழியாக மதுரை சுற்றுச்சாலையில் இணைந்து சிவகங்கை மாவட்டம் பூவந்தியில் முடியும் 950 மீட்டர் நீளமுள்ள ரூ.150 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள மேம்பாலத்திற்கு வெள்ளையனை எதிர்த்து வீரப்போர் புரிந்து சிவகங்கையை மீட்டு சிறப்பாக ஆட்சி செய்த வீரமங்கை வேலுநாச்சியார் அவர்கள் பெயர் சூட்டப்படும் என்று அறிவித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

மு.க.ஸ்டாலின்

அவர்களுக்கு நன்றி! நன்றி!! நன்றி!!!

வீர மங்கை வேலு நாச்சியார் மேம்பாலத்தை திறக்க மதுரைக்கு வருகை தரும் மாண்புமிகு தமிழ்நாடு முதல் அமைச்சர் அவர்களே வருக! வருக!!

வேலு நாச்சியாரின் வழித்தோன்றல்கள்...

முனைவர்.Er பிரபா நாச்சியார், Er ஜெயஸ்ரீ நாச்சியார், Dr மோகனா நாச்சியார், Er சங்கீதா நாச்சியார் USA

மற்றும் இவர்களுடன்

காரியாபட்டி சித்தனேந்தல்

கூத்தன் சேதுபதி பால்சாமி அக்ரி கணேசன்

கழகத் தீர்மானக் குழு செயலாளர், மதுரை